ரூ.2,000 கோடியில் 'வெற்றி மடிக்கணினி' திட்டம்: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை, நவ.7: உயர்கல்வி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை (லேப்டாப்) வழங்கும் வெற்றி மடிக்கணினி திட்டத்தை ரூ.2,000 கோடியில் செயல்படுத்த முதல்வர் ச.ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்த தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாணவர்களின் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றம் என்ற உயர்ந்த நோக்கத்தில், கல்லூரி மாணவர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்த வெற்றி மடிக்கணினித் திட்டத்தைச் செயல்படுத்திட முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார். இன்றைய எண்ம (டிஜிட்டல்) உலகில், உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி என்பது இன்றியமையாதது. தொழில்நுட்ப அறிவு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, இணையவழிக் கல்வி, எதிர்கால வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு மடிக்கணினிகள் பெரிதும் உதவும்.

2026-27-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் வெற்றி மடிக்கணினித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அரசாணைகள்: இதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், நிதி ஒதுக்கீட்டிற்கு நிர்வாக ரீதியான அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

நிகழ் 2026-27-ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ), மருத்துவம், கால்நடை மருத்துவம், மீன்வளம், வேளாண்மை, சட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்விப் பிரிவுகளில் பயிலும் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மாணவர்கள் இந்த திட்டத்தில் பயனடைவர்.

உயர் நிலைக் குழு: இத்திட்டத்தை மிகச் சீரிய முறையில் கண்காணித்து, தொய்வின்றிச் செயல்படுத்திட முதல்வர் தலைமையில் உயர்நிலை வழிகாட்டுதல் குழுவும் அமைக்கப்படவுள்ளது. மேலும், தரக்கட்டுப்பாட்டுடன் கூடிய மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்வதை உறுதி செய்ய தமிழ்நாடு மின்னணு நிறுவனத்துக்கு (எல்காட்) அனுமதி வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் (2011) சுமார் 50 லட்சம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு 'அம்மா மடிக்கணினி திட்டம்' பெயரில் தொடங்கப்பட்டது. திமுக ஆட்சியில் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 2025-26 நிதியாண்டில் ரூ.2,000 கோடி மதிப்பில் 20 லட்சம் மாணவர்களுக்கு, 'உலகம் உங்கள் கையில்' பெயர் மாற்றத்துடன் மடிக்கணினி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விடுபட்ட மாணவர்களுக்கும் மடிக்கணினி



முந்தைய 2025-26-ஆம் கல்வியாண்டில் மடிக்கணினித் திட்டத்தில் விடுபட்ட அரசு, அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள், தொழில்முறைப் படிப்புகளில் பயிலும் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களும் நிகழாண்டு திட்டத்தில் மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மேலும், பொறியியல் மாணவர்களின் தொழில் நுட்பக் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இன்டெல் கோர் – ஐ-5 செயலி அல்லது அதற்கு இணையான உயர்தரத் தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணினிகள் வழங்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மின்கசிவால் குளிர்பதனப்பெட்டி வெடித்து வீடு தரைமட்டம்

சிறுவன் உயிரிழப்பு; பெற்றோர் உள்ளிட்ட 4 பேர் காயம்



விழுப்புரம் மாவட்டம், வீரசோழபுரம் கிராமத்தில் குளிர்பதனப்பெட்டி வெடித்ததில் தரைமட்டமான வீடு.

விழுப்புரம், நவ. 7: விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் அருகே மின்கசிவால் குளிர்பதனப்பெட்டி வெடித்ததில் வீட்டின் கட்டடம் இடிந்து தரைமட்டமானது. இதில் இடிபாடுகளில் சிக்கி 10 வயது சிறுவன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். மேலும், பெற்றோர் உள்ளிட்ட 4 பேர் காயமடைந்தனர்.

அரகண்டநல்லூர் அருகிலுள்ள வீரசோழபுரம் மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் ரா.மூர்த்தி (47). இவர், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் ஊர்க்காவல்படை வீரராகப் பணியாற்றி வருகிறார். மேலும் வீட்டின் முன் பகுதியில் பெட்டிக் கடையையும் நடத்தி வருகிறார். இவரது மனைவி சரண்யா (42), மகன் பத்ரிநாத் (10), உறவினர்கள் ரா.சுமதி (37), கா.பிரபு (38). பத்ரிநாத் அப்பகுதியிலுள்ள பள்ளியில் 5-ஆம் வகுப்பு படித்து வந்தார். சனிக்கிழமை காலை வீட்டில் சரண்யா சமையல் செய்து கொண்டிருந்தார். மூர்த்தி, பத்ரிநாத் மற்றும் உறவினர்கள் இருவர் என 4 பேர் வீட்டில் இருந்தனர். காலை 10.40 மணியளவில் வீட்டின் சமையல் அறையிலிருந்த குளிர்பதனப்பெட்டி திடீரென வெடித்ததாம். இதன் காரணமாக வீடு இடிந்து தரைமட்டமானது.

இந்த விபத்தில் வீட்டிலிருந்த பத்ரிநாத் இடிபாடுகளுக்குள் சிக்கி நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். மேலும் வீட்டுக்குள் இருந்த மூர்த்தி, சரண்யா, உறவினர்கள் சுமதி, பிரபு ஆகிய 4 பேரும் பலத்த காயமடைந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த அரகண்டநல்லூர் போலீஸாரும், திருக்கோவிலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வீரர்கள் நிகழ்விடம் சென்று, விபத்தில் உயிரிழந்த பத்ரிநாத்தின் சடலத்தை மீட்டு, உடற்கூறாய்வுக்காக விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், பத்ரிநாத்தின் தந்தை மூர்த்தி, தாய் சரண்யா ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன் இதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுமதி, பிரபு ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன் திருக்கோவிலூரிலுள்ள மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அரகண்டநல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து, விசாரணை நடத்தி வருகின்றனர். போலீஸாரின் முதல்கட்ட விசாரணையில் மின்கசிவு காரணமாக குளிர்பதனப்பெட்டி வெடித்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவந்தது.

புத்தகம் கொள்முதல் செய்ய ஆணையிட்ட அதிகாரிகள் யார்?

விசாரணை கோரி ஊழல் தடுப்புத் துறையில் திமுக புகார்

சென்னை, நவ. 7: கோவை பெரியார் அறிவுலகத்துக்கு புத்தக கொள்முதல் நடைபெற்றதில் முறைகேடு குறித்து விசாரிக்க திமுக சார்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

திமுக சார்பில், அக்கட்சியின் சட்டத் துறை இணைச் செயலர் பரந்தாமன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் சனிக்கிழமை புகார் அளித்துள்ளார்.

பின்வரும் 8 கேள்விகள் விசாரணைக்குள்படுத்தப்பட வேண்டும் என அந்த புகார் மனுவில் அவர் கோரியுள்ளார்.

அதன் விவரம்:

1. இந்த புத்தகங்களைக் கொள்முதல் செய்வதற்கான உத்தரவுகளை வழங்கிய அதிகாரிகள் யார்?
2. புத்தகங்கள் ஒவ்வொன்றாக மதிப்பீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப்பட்டதா அல்லது மொத்தமாக வாங்கப்பட்டதா?
3. இந்த பதிப்பகங்களுக்கு கொள்முதல் உத்தரவுகள் எந்த தேதிகளில் வழங்கப்பட்டன?
4. கொள்முதலுக்கான குறிப்பு கோப்பைத் தொடங்கிய, கையொப்பமிட்ட மற்றும் ஒப்புதல் அளித்த அதிகாரிகள் யார் யார்?
5. இந்த கொள்முதலுக்கு தகுதி வாய்ந்த புத்தகத் தேர்வு, கொள்முதல் குழு ஒப்புதல் அளித்ததா, பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா?
6. திரிஷா விஜய், சங்கீதா விஜய், தாமரை பன்னீர், தாமரை முரளி, மோனிகா ரவி ஆர். மற்றும் பிற பெயர்களைக் கொண்ட எழுத்தாளர்கள் உண்மையில் இருக்கிறார்களா?
7. புத்தகங்கள் எந்தத் தேதிகளில் விநியோகிக்கப்பட்டன, அவை பெறப்பட்டவுடன் அவற்றின் தரம் மற்றும் அளவு சரிபார்க்கப்பட்டதா?
8. ஒவ்வொரு பதிப்பகத்துக்கும் எந்தத் தேதிகளில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது? ஆகியவை விசாரிக்கப்பட வேண்டும் என அதில் கோரப்பட்டுள்ளது.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய பரந்தாமன், 'பெரியார் அறிவுலகத்துக்கு கொள்முதல் செய்யப்பட்ட புத்தக விவரங்களை தமிழக அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்' என்றார்.

பெங்களூரில் கொலை செய்யப்பட்ட 7 பேரில் இருவரின் உடல்கள் ஏற்காடு வனப் பகுதியில் மீட்பு

எஞ்சிய உடல்களை தேடும் கர்நாடக போலீஸார்

ஏற்காடு, நவ. 7: பெங்களூரில் குடும்பத் தகராறு காரணமாக மனைவி உள்பட குடும்பத்தில் உள்ள 7 பேரைக் கொன்று ஏற்காடு வனப் பகுதியில் உடல்களை வீசியதாக கார் ஓட்டுநர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏற்காடு வனப் பகுதியில் இருந்து இரண்டு பேரின் உடல்களை தமிழக போலீஸார் உதவியுடன் கர்நாடக போலீஸார் சனிக்கிழமை மீட்டனர்.

கர்நாடக மாநிலம், பெங்களூரு ஸ்ரீராமபுரம் பாஷ்யம் சர்க்கிள் பகுதியைச் சேர்ந்தவர் இந்துசேகர் (52), கார் ஓட்டுநர். இவரது மனைவி சுனிதாவுக்கும் (40) இவருக்கும் நீண்ட நாள்களாக குடும்பத் தகராறு இருந்துள்ளது. இதனால் சுனிதா அடிக்கடி தனது தாய்வீட்டுக்குச் சென்று வந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, சுனிதாவின் குடும்பத்தினர் மீது இந்துசேகருக்கு வெறுப்பு ஏற்பட்டதால், மனைவியின் குடும்பத்தினரைக் கொலைசெய்ய திட்டமிட்டுள்ளார். அதன்படி, வீட்டில் இருந்த மனைவி சுனிதாவை ஆட்டுக்கல்லால் தலையில் தாக்கிக் கொலை செய்துள்ளார். பின்னர், அவரது உடலை துணியில் சுற்றி, சிக்கபள்ளாப்பூர் நந்தி ஹில்ஸ் பகுதியில் வீசியுள்ளார். தொடர்ந்து, தனது தொலைபேசியைச் செயலிழக்கச் செய்து, அருகில் இருந்தவர்களிடம் வெளியூருக்குச் சென்றிருப்பதாகக் கூறி நாடகமாடியுள்ளார்.

பின்னர், தனது மைத்துனர்களான சிவக்குமார் (30), சங்கர் (44) ஆகியோரை வீட்டுக்கு வரவழைத்து, ஆட்டுக்கல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளார். தொடர்ந்து, சங்கரின் மனைவி திவ்யா (30), சிவக்குமாரின் மனைவி நளினி (29), மாமியார் ரூபாவதி (65), சங்கரின் மகன் புனீத் (7) ஆகியோரையும் அதே முறையில் கொலை செய்து, வெவ்வேறு இடங்களில் உடல்களை வீசியுள்ளார்.

குடும்பத்தினர் அடுத்தடுத்து மாயமானதால், நளினியின் தாய் தூங்கம்மா அளித்த புகாரின் பேரில், பெங்களூரு ராஜாஜிநகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், இந்துசேகர் தனது மனைவி உள்ளிட்ட 7 பேரையும் கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து, இந்துசேகரை கைதுசெய்த போலீஸார், புனீத்தின் உடலை மீட்டனர். எஞ்சிய 6 பேரின் உடல்களை தேடிவந்தனர்.

இந்த நிலையில், சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பாதையை ஒட்டிய வனப்பகுதியில் சிலரின் உடல்களை வீசியதாக இந்து சேகர் போலீஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இதுகுறித்து சேலம் மாவட்ட போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, பெங்களூரு ராஜாஜிநகர் போலீஸார் அமைத்துள்ள தனிப்படையினர் சனிக்கிழமை ஏற்காடு வந்தனர். அவர்கள், ஏற்காடு போலீஸாரின் உதவியுடன் குறிப்பிட்ட வனப் பகுதியில் உடல்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இந்துசேகர் காரில் ஏற்காடு அடிவாரப் பகுதிக்கு வந்து சென்றது சிசிடிவி கேமராக்களில் பதிவாகியுள்ளதா என்றும் போலீஸார் ஆய்வு செய்தனர்.

2 உடல்கள் மீட்பு

இதனிடையே, ஏற்காடு வந்த கர்நாடக டிஎஸ்பி பிரபாவதி தலைமையிலான சிறப்புப் படை போலீஸார், சேலம் டிஎஸ்பி கபிலன், ஏற்காடு காவல் ஆய்வாளர் அமிர்தலிங்கம் ஆகியோருடன் சேர்ந்து ஏற்காடு நாகலூர் செல்லும் சாலையில் கடுக்காமரம் பகுதியில் உள்ள தனியார் காபி தோட்டத்தில் 30 அடி பள்ளத்தில் உடல்களை சனிக்கிழமை தேடினர்.

அங்கு, போர்வையால் சுற்றப்பட்டு கிடந்த இரண்டு மூட்டைகளைக் கைப்பற்றினர். அதில் இந்துசேகரின் மனைவி சுனிதா, அவரது மாமியார் ரூபாவின் உடல்கள் இருப்பது தெரியவந்தது. அழுகிய நிலையில் இருந்த உடல்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், கொலை செய்யப்பட்டு வீசப்பட்ட எஞ்சிய உடல்களையும் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இந்துசேகர், கடந்த அக்டோபர் 18 ஆம் தேதி இந்த இரண்டு உடல்களையும் ஏற்காட்டில் கொண்டுவந்து வீசியதாக போலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 7,748 கனஅடி



மேட்டூர், நவ. 7: மேட்டூர் அணைக்கு சனிக்கிழமை காலை 10,864 கனஅடியாக இருந்த நீர்வரத்து மாலை விநாடிக்கு 7,748 கனஅடியாக குறைந்தது.

அணையில் இருந்து விநாடிக்கு 1,000 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்தைவிட தண்ணீர் வெளியேற்றப்படும் அளவு குறைவாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் 58.95 அடியில் இருந்து 59.21 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 24.10 டிஎம்சியாக உள்ளது.

டால்மியா பாரத் ரெஃப்ராக்டரீஸ் லிமிடெட்

CIN: - L26100TN2006PLC061254

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், அஞ்சல்: கல்லக்குடி - 621651, மாவட்டம்: திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

தொலைப்பேசி:-911123457100, இணையத்தளம்: www.dalmiaocl.com

செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(ரூ.கோடியில், பங்குக்கான தரவு நீங்கலாக)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2026	30.06.2026	30.09.2025	30.09.2026	30.09.2025	31.03.2026
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்							
1	தொடர் செயல்பாடுகளில் இருந்து மொத்த வருவாய்	215.50	167.55	71.70	383.05	119.03	324.33
2	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் / (நட்டம்) விதிவிலக்கு இனங்கள் மற்றும் நிறுவனத்தின் லாபம்/நஷ்டத்தில் பங்கு - தொடர் செயல்பாடுகள்	(76.04)	(63.85)	(43.68)	(139.89)	(63.07)	(204.69)
3	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம் / (நட்டம்) விதிவிலக்கு இனங்கள் - தொடர் செயல்பாடுகள்	(76.04)	(63.85)	(44.71)	(139.89)	(83.10)	(222.84)
4	இந்தக் காலப்பகுதிக்கான முழு வருவாய் (வரிக்குப் பிந்தைய காலப்பகுதிக்கான லாபம் மற்றும் பிற முழு வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கியது) - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(447.07)	(6.42)	(124.28)	(453.49)	(123.17)	(705.04)
5	செலுத்தப்பட்ட ஈக்குவிட்டி ஷேர் மூலதனம் (முகமதிப்பு ரூ.10/- / பங்கு)	45.88	45.88	44.20	45.88	44.20	45.88
6	மறுமதிப்பிட்டு ரிசர்வுகள் நீங்கலாக இதர ஈக்குவிட்டி	-	-	-	-	-	1,763.17
இடைநின்ற வணிக செயல்பாடுகள்							
7	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் & விதிவிலக்கு இனங்கள் இடைநின்ற செயல்பாடுகளில் இருந்து	-	(0.08)	0.81	(0.08)	0.23	(0.34)
8	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம் / (நட்டம்) & விதிவிலக்கு இனங்கள் இடைநின்ற செயல்பாடுகளில் இருந்து	-	(0.08)	0.81	(0.08)	0.23	(44.15)
9	ஒரு பங்குக்கான வருமானம் (ரூ.10/- / பங்கு) (ஆண்டு விகிதத்தில் கணக்கிடப்படாதது)	-	-	-	-	-	-
	(அ) அடிப்படையானது மற்றும் நீர்க்கப்பட்டது - தொடர் செயல்பாடுகள்	(16.53)	(13.87)	(9.71)	(30.40)	(18.03)	(48.39)
	(ஆ) அடிப்படையானது மற்றும் நீர்க்கப்பட்டது - இடைநின்ற செயல்பாடுகள்	-	(0.02)	0.19	(0.02)	0.07	(9.62)
	(இ) அடிப்படையானது மற்றும் நீர்க்கப்பட்டது - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(16.53)	(13.89)	(9.52)	(30.42)	(17.96)	(58.01)
தனித்த நிதிநிலை முடிவுகள்							
1	தொடர் செயல்பாடுகளில் இருந்து மொத்த வருவாய்	199.30	151.40	49.40	350.70	83.85	258.74
2	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் / (நட்டம்) & விதிவிலக்கு இனங்கள் - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(75.60)	(64.21)	(49.56)	(139.81)	(74.51)	(219.97)
3	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம் / (நட்டம்) & விதிவிலக்கு இனங்கள் - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(75.60)	(64.21)	(49.56)	(139.81)	(74.51)	(219.97)

குறிப்புகள்:

1. மேற்படி நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டபின், நவம்பர் 06, 2026-ம் நாளில் நடத்தப்பட்ட அவர்களது ஆய்வுக் கூட்டத்தில் இயக்குனர்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இந்த நிதிநிலை முடிவுகள் குறித்து சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மாறுபாடுகள் அற்ற தணிக்கை கருத்தை வழங்கினர்.
2. மேற்படி அறிக்கையானது, SEBI (கடமைகளை வரிசைப்படுத்துதல் மற்றும் கணக்குக்காட்டும் தேவைகள்) ஒழுங்காற்று முறைகள் 2015-ன் ஒழுங்குமுறை 33-ன் கீழ், பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட செப்டம்பர் 30, 2026 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சாராம்சமாகும். முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத முழு வடிவம், பங்குப் பரிவர்த்தனை நிறுவனங்கள் வலைத்தளம் **www.msei.in** மற்றும் **www.cse-india.com** மற்றும் மேலும் நிறுவனத்தின் வலைத்தளம் **www.dalmiaocl.com** ஆகியவற்றில் கிடைக்கும்

இடம்: புது தில்லி
தேதி: நவம்பர் 06, 2026

டால்மியா பாரத் ரெஃப்ராக்டரீஸ் லிமிடெட்-க்காக
ஒம்/-
சந்தர் நரேன் மகேஸ்வரி
முழுநேர இயக்குநர் & தலைமைச் செயல் அலுவலர்
DIN: 00125680



வரி விளம்பரம்

JOB OPPORTUNITIES

TEACHERS WANTED

St. Christopher's College of Education
63, E.V.K. Sampath Road
Vepery, Chennai-7.

Applications with copies of certificates and testimonials should be sent to the Principal on or before 23.11.2026 for the following Posts

I. Assistant Professor (Approved Posts)
• Education • History
• Geography • Home Science
(Qualifications: UGC Norms)

II. Non -Teaching (Approved Posts)
• Junior Assistant • Assistant
(Qualifications: State Govt. Norms)

Contact Number: 98401 37087
E mail ID:
stchristopherscollege@gmail.com

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை!
புதுமை!
இனிமை!

மணமேடை

மணமகன் தேவை

Suitable Match

For Graancee Mathew, Latin Catholic Christian girl, born 1996, B.Tech, working as Electrical Officer with Carnival Cruises, UK (Merchant Navy). Residing at Kizhakkambalam, Ernakulam. Parents retired. Proposals invited from well-educated, career-oriented grooms.

Contact:
+91 7012247887

பேங்க் ஆஃப் பரோடா மூலப்பாளையம் கிளை : எண்.86–88, விநாயகர் கோவில் வீதி, எண்.2, பூந்துறை ரோடு, மூலப்பாளையம், ஈரோடு – 638 002, போன் : 95977 70054, மின்னஞ்சல் : MOOLAP@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் (ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள பேங்க் ஆஃப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	சொத்து நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம் தொடங்கும் நேரம் மதியம் 2.00 முதல் முடியும் நேரம் மாலை 6.00 மணி வரை	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. M/s.ரைடர்ஸ் ஜோன், உரிமையாளர் : திரு.மோகன்ராஜ்.N, 340, பூந்துறை ரோடு, KAS நகர், மூலப்பாளையம், ஈரோடு – 638 002. 2. திருமதி.சிந்துஜா.C, க/பெதிரு.மோகன்ராஜ்.N, 340, பூந்துறை ரோடு, KAS நகர், மூலப்பாளையம், ஈரோடு – 638 002.	1. ஈரோடு மாநகராட்சி, பெருந்துறை சார் பதிவக எல்லைக்குள், வேப்பம்பாளையம் கிராம மறு க.ச.எண்.223/1ல் அடங்கிய வீட்டு மனை எண்.19, திரு.N.மோகன்ராஜ் (உரிமையாளர் : M/s.ரைடர்ஸ் ஜோன்) பெயரில் 2620 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ள காலி வீட்டு மனை சார்பினையச் சொத்து. இதன் **எல்லைகள் :** 7 மீட்டர் (23 அடி) அகல கிழமேல் லேஅவுட் ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.38க்குத் தெற்கு, மறுசர்வே எண்கள் 222, 224/2ல் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, வீட்டு மனை எண்.20க்கு மேற்கு. **அளவுகள் :** கிழமேல் வடபுறம் 44 அடி 6 அங்குலம், கிழமேல் தென்புறம் 36 அடி, தென்வடல் மேல்புறம் 65 அடி, தென்வடல் கிழபுறம் 65 அடி. இதனுட்பட் 2620 சதுர அடி அளவுள்ள வீட்டுமனையுடன் அனைத்து மாமூல் தடவழி உபயோக உரிமைகள் முதலியன சேர்ந்த சொத்து. மேற்சொன்ன வீட்டுமனைச் சொத்துகள் குறிப்பாக வேப்பம்பாளையம் கிராம மறு க.ச.எண்.223/1ல், வேப்பம்பாளையம் கிராமம் மற்றும் ஊராட்சியில் ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள், ஈரோடு மாவட்டம் மற்றும் தாலுகா, ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை சார் பதிவு மாவட்டத்தில் அடங்கியதாகும். 2. ஈரோடு மாநகராட்சி, பெருந்துறை சார் பதிவக எல்லைக்குள், வேப்பம்பாளையம் கிராம மறு க.ச.எண்.223/1ல் அடங்கிய வீட்டு மனை எண்.20, திரு.N.மோகன்ராஜின் மனைவி திருமதிசிந்துஜா.C (உரிமையாளர் : M/s.ரைடர்ஸ் ஜோன்) பெயரில் 2600 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ள காலி வீட்டு மனை சார்பினையச் சொத்து. இதன் **எல்லைகள் :** 7 மீட்டர் (23 அடி) அகல கிழமேல் லேஅவுட் ரோட்டுக்கு வடக்கு, மனை எண்.37க்குத் தெற்கு, வீட்டு மனை எண்.19க்கு கிழக்கு, வீட்டு மனை எண்.21க்கு மேற்கு. **அளவுகள் :** கிழமேல் வடபுறம் 40 அடி, கிழமேல் தென்புறம் 40 அடி, தென்வடல் மேல்புறம் 65 அடி, தென்வடல் கிழபுறம் 65 அடி. இதனுட்பட் 2600 சதுர அடி அளவுள்ள வீட்டுமனையுடன் அனைத்து மாமூல் தடவழி உபயோக உரிமைகள் முதலியன சேர்ந்த சொத்து. மேற்சொன்ன வீட்டுமனைச் சொத்துகள் குறிப்பாக வேப்பம்பாளையம் கிராம மறு க.ச.எண்.223/1ல், வேப்பம்பாளையம் கிராமம் மற்றும் ஊராட்சியில் ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள், ஈரோடு மாவட்டம் மற்றும் தாலுகா, ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை சார் பதிவு மாவட்டத்தில் அடங்கியதாகும். மொத்த பிணையச் சொத்தின் விஸ்தீரணம், வீட்டு மனை எண்.19ல் 2620 சதுர அடி விஸ்தீரணத்தில் திரு.N.மோகன்ராஜ் பெயரிலும் (உரிமையாளர் : M/s.ரைடர்ஸ் ஜோ